4th November 1966]

திரு. மு. ப. அழகமுத்து : ஜெயங்கொண்டான் பகுதிக்கு காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் வகுக்கப்பட்டு டெவலப்மென்ட் கவுன்சில் சிபார்சு செய்திருக்கிறதா? அப்படியென்றால் அந்த சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டனவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. இர. பொன்னப்ப நாடார் : கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரிலிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா? பணம் அங்கிருந்து வராததினால்தான் வேலைகளைத் துவக்க தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஆகையால் மத்திய சர்க்காரை மாகாண சர்க்கார் சீக்கிரம் பணத்தை ஒதுக்கும்படி கேட்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பல திட்டங்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து நிதிகள் வருவதற்கு மாகாண அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர் : குடிதண்ணீர் வசதி ஓமலூருக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா? மேட்டூர் தண்ணீர் சேலம் வரும்போது அது ஓமலூருக்குக் கொண்டுவரப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி ஜெயங்கொண்டானைப் பொருத்தது. அதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

* 371 கேள்வி.—**திரு. நா. சௌந்திரபாண்டியன் : கனம்** சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரியில் குடிதண்ணீர் பற்றுக்குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பங்கள் அண்மையில் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின்மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) நாங்குனேரிக்கு நீர் வழங்குவதற்குரிய வேலைத் திட்டம் ஒன்றுக்கு வகை செய்யுமாறு நாங்குனேரி, நீர் வழங்க திட்டக்குழுவின் உறுப்பினர்களிடமிருந்து 1965 ஜூன் மாதத்தில் முறையீடு ஒன்று அரசாங்கத்துக்கு வந்தது. பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் ஒப்புதலுடன் "கிராமப் பணிகள் திட்டத்தின்" கீழ் தான் இப்பஞ்சாயத்துக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளலாம் என்று இக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

[4th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : திட்டத்தின் உத்தேச மதிப்பு என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

* 372 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any new schemes are being envisaged for augmenting the drinking water-supply in Ootacamund; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) புதிய திட்டங்கள் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : தற்போதுள்ள நீர் நிலையங்களில் குடி தண்ணீருக்காக தேக்கப்படும் நீர் அன்றாட அதிகபட்ச தேவைக்குப் போதவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஏதாவது புதிதாக டாம்ஸ், ரிசர்வாயர்களைப் பயன்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு 21.51 லட்சம் ரூபாய். அதில் நான்கு ஸ்டேஜ்கள் இருக்கின்றன. அவை—

(1) Tapping additional sources by constructing diversion weirs. Laying conveying mains and constructing off-take chamber.

(2) Relaying of distribution system in zones 5, 6 and 7 out of 9 zones.

(3) Relaying of distribution system in the remaining zones.

(4) Construction of an earthern dam across Gorishola Stream with surplus arrangements and constructing in-take tower.

Prevention of Adulteration of Food.

* 373 Q.—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have made any recommendation to the Centre indicating the urgent need to make some changes in the Prevention of Adulteration of Food Act; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) The Government of India have been requested to take action to amend the Act by deleting the proviso allowing 2.5 parts of lead in one million parts of turmeric in Appendix-B of the Prevention of Food Adulteration Rules so that colouring by harmful ingredients or unharmful ingredients would not be permitted.